திட்டம் இருக்கிறது. அதை மறுபரிசீலனை செய்வதற்கு அரசிடம் யோசனை ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகின்ற ரூ. 8 கோடி திட்டம் என்பது மத்திய அரசிடமும் இல்லை, மாநில அரசிடமும் இல்லை. எந்த தகவலை வைத்துக் கொண்டு உறுப்பினர் இதைக் கூறுகிறார் என்று தெரியவில்லை. நான் விசாரித்த வரையில் அப்படி ஏதும் திட்டம் இருப்பதாகத் தகவல் இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: May I know from the Hon. Minister for Works the total length of Highways roads in our State and also the basis on which the amount is allotted by the Centre to the States for improving such roads?

THE HON. THIRU P. U. SHANMUGAM: Sir, I want notice.

கவரைப்பேட்டை—சத்தியவேடு நெடுஞ்சாலை

*.249 வினு.—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

பொன்னேரி வட்டம், கவரைப்பேட்டை—சத்தியவேடு நெடுஞ்சாலையில் உள்ள குறுகலான கல்வெர்ட்டுக்களையும், சிறு பாலங்களையும் அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. கா வேழவேந்தன்: தலைவரவர்களே, அந்த நெடுஞ்சாலை ஆந்திர மாநிலத்துடன் இணைகின்ற ஒன்று. நெடுஞ்சாலையிலுள்ள கல்வர்ட்களும் பாலங்களும் மிகச் சிறியனவாக, குறுகலாக இருப்பதால் அவற்றை அகலப் படுத்த அரசிடம் திட்டமேதேனுமிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, நிதி வருவாய் சரியாக இருக்குமானுல் அதைப்பற்றி ஆராயலாம்.